செ.வெ.எண். 51 நாள்:30.09.2020

## நாமக்கல் மாவட்டம்

## சிறுபான்மையினருக்காக நலத்திட்டங்கள் குறித்த ஆலோசனை கூட்டத்தில் 22 சிறுபான்மையினர்களுக்கு ரூ.88.32 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகள் - தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் திரு.டி.ஜான் மகேந்திரன் அவர்கள் வழங்கினார்.

------------

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பிற்படுத்தப்பட்டோர் மற்றம் சிறுபான்மையினார் நலத்துறையின் சார்பில் சிறுபான்மையினருக்கான நலத்திட்டங்கள் குறித்த ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் இன்று (30.09.2020) நடைபெற்றது. சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் மற்றும் மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் உறுப்பினர்-செயலர் முனைவர்.சீ.சுரேஷ்குமார் இ.ஆ.ப., அவர்கள், துணைத் தலைவர் திரு.Y.ஜவஹர் அலி அவர்கள் ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் திரு.டி.ஜான் மகேந்திரன் அவர்கள் கிறித்துவ மகளிர் மற்றும் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், கூட்டுறவு சங்கங்கள், வருவாய் துறை, மாவட்ட தொழில் மையம் ஆகியவற்றின் மூலம் 22 நபர்களுக்கு ரூ.88.32 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் முஸ்லீம் மகளிர் உதவும் சங்கத்திற்கு திரட்டி வழங்கப்பட்ட ரூ.35 ஆயிரத்திற்கான நன்கொடை காசோலை, கிறித்துவ மகளிர் உதவும் சங்கத்திற்கு திரட்டி வழங்கப்பட்ட ரூ.1.20 இலட்சத்திற்கான நன்கொடை காசோலைகளை தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர்

திரு.டி.ஜான் மகேந்திரன் அவர்கள் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல அலுவலரிடம் வழங்கினார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் திரு.டி.ஜான் மகேந்திரன் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தமிழ்நாட்டிலுள்ள கிறித்துவர்கள் புனித பயணமாக ஜெருசலேம் செல்வதற்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் ஆண்டுதோறும் 600 கிறித்துவர்கள் புனித பயணம் மேற்கொள்ள வழிவகை செய்யபட்டுள்ளது. இதில் 50 இடங்கள் அருட் சகோதரிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கென அரசின் நிதி உதவியாக ஒரு நபருக்க ரூ.20 ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது.

முஸ்லீம் பெருமக்கள் ஹஜ் யாத்திரை மேற்கொள்ள தமிழ்நாடு ஹஜ் கமிட்டி மூலமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அனைத்து வசதிகளையும் செய்து வருகிறது. ஹஜ் யாத்திரை செல்லும் பயணிகள் சென்னையில் தங்கிச் செல்ல ஹஜ் பயணிகளுக்கான தங்கும் விடுதி கட்டடம் ரூ.15 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உலமாக்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை ரூ.1,500/-லிருந்து ரூ.3000/- ஆக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டுள்ளார்கள்

தமிழ்நாட்டிலுள்ள முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்கள் திரட்டும் நன்கொடை நிதி ஆதாரத்திற்கு ஏற்ப அதற்கு இணையாக ஆண்டுதோறும் ரூ.20 இலட்சம் வரை அரசால் இணை மானியம் வழங்கப்படுகிறது.

கிறித்துவ தேவாலயங்களை பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணிகள் மேற்கொள்ள அரசு நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.1 இலட்சம் முதல் ரூ.3 இலட்சம் வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூ.3 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீட்டை ரூ.5 கோடியாக உயர்த்தி நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் திரட்டும் நன்கொடை நிதி ஆதாரத்திற்கு ஏற்ப அதற்கு இணையாக ஆண்டுதோறும் ரூ.20 இலட்சம் வரை அரசால் இணை மானியம் வழங்கப்படுகிறது.

சிறுபான்மையின மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பள்ளிக்கல்வி முதல் ஆராய்ச்சி படிப்பு வரையிலும், தொழிற்கல்வி மற்றும் தொழிற்நுட்பக் கல்வி ஆகிய படிப்புகளுக்கும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

அயல்நாடுகளில் பட்ட மேற்படிப்பு, ஆராய்ச்சி படிப்பு பயில்வதற்கு வங்கிகள் மூலம் ரூ.20 இலட்சம் வரை கல்வி கடன் வழங்கப்படுகிறது. இதில் கல்வி கடனுக்கான முழு வட்டித்தொகை மானியமாக மத்திய அரசின் சிறுபான்மையின விவகார அமைச்சகத்தின் மூலம் வங்கிகளுக்கு நேரடியாக வழங்கப்படுகிறது.

PMJVK திட்டத்தின் கீழ் குடிநீர் வசதி, சாலை வசதிகள், கழிவறை வசதி, கான்கீரிட் வீடுகள் அமைத்தல், மின்சார வசதி போன்ற அடிப்படை வசதிகள் மூலம் பின்தங்கிய சிறுபான்மையினர் வசிக்கும் பகுதிகள் மேம்படுத்தப்படுகிறது.

டாம்கோ மூலம் செயல்படுத்தப்படும் கடனுதவித் திட்டத்தின் கீழ் புதிய தொழில் தொடங்க மற்றும் ஏற்கனவே செய்து வரும் தொழிலை விரிவாக்கம் செய்வதற்கு கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது.

சிறுபான்மையினர் வியாபாரம் செய்ய, தொழில் தொடங்க தனி நபர் கடன் வழங்கும் திட்டம், சிறுபான்மையின பெண்கள் ஆண்கள் சுய உதவி குழுக்களுக்கு காய்கனி கடை, மீன் வியாபாரம், பூ வியாபாரம், பலகாரக்கடை, தையல் கடை, கைத்தொழில்கள் போன்ற சிறுவணிகம் நடத்த கடன் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சிறுபான்மையின இளைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில் அவர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி வழங்கப்படுகிறது என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.மா.ரவிக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.துர்காமூர்த்தி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.கு.மோகனசுந்தரம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.சீனிவாசன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள், சிறுபான்மையினர் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல்.**